


திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருக்கோவிலூர் முதல் அருமலை வரை (வழி) நெற்குணம் வழித்தடத்தில் புதிய பேருந்து வசதியை உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கொடியசைத்து துவக்கி வைத்தார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் சி.பழனி, பொதுமேலாளர், மணி, துணை மேலாளர் (வணிகம்) கிளை மேலாளர் ஆதி.அண்ணாமலை, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம. ஜெயச் சந்திரன் , மாவட்ட துணை செயலாளர் டி.என்.முருகன் , மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், ஒன்றிய கழகச் செயலாளர்கள் அ.சா.ஏ.பிரபு, தொ.மு.ச. பொதுச் செயலாளர் வி.சேகர், நிர்வாகப் பணியாளர் முன்னேற்றச் சங்கம் வாலிபால் தலைவர் ஞானசேகரன், அமைப்புச் செயலாளர் வேலு மற்றும் நிர்வாகிகள், கழகத் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.




முன்னாள் ஒன்றிய அமைச்சரும் – முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக விளங்கிய முரசொலி மாறன் அவர்களின் 20’வது ஆண்டு நினைவு தினத்தையொட்டி திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாவட்டக் கழக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முரசொலி மாறன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்த் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மதிவாணன், கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அரங்கநாதன், சேகரன், சபியுல்லா மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவிந்தராஜ், லீலாவேலு, மூக்கன், செங்குட்டுவன், துணை மேயர் திவ்யா, பகுதி கழகச் செயலாளர் மோகன் மற்றும் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுவோம்!

# சேலம் இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் திரளாகப் பங்கேற்பு!

## மயிலாடுதுறை மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

நாகை. நவ.24

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன் தலைமை தாங்கினார். கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம. இளங்கோவன், முத்து. மகேந்திரன், ஜி.என்.ரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் பேசினார்.



கூட்டத்தில் மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்திய சீலன், ஏ.சி.என்.சிவபாலன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞான வேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்ல.சேதுரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், என்.இளையபெருமாள், ஞான.இமையநாதன், ப.முருகமணி, மூவலூர் மூர்த்தி, எம்.அப்துல்மாலிக், அமுர்த.விஜயகுமார், மங்கை எம்.சங்கர், கு.வைத்தியநாதன், ஏ.ஆர்.ராஜா, ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பஞ்சுகுமார், நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.சுவாமிநாதன், பி.சிவதாஸ், எஸ்.வெற்றிவேல், ஜெ.கபிலன், பி.கென்னடி, சுபா நெடுஞ்செழியன், சங்கரநாராயணன், நத்தம் வின்செண்ட்,

பேரூர்க் கழகச் செயலாளர்கள் எம்.அன்புச்செழியன், எம்.சம்சுதீன், முத்துராஜா, அண்ணாதுரை, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே.மருது, க.அறிவுச்செல்வன், தேசப்பன், முத்து.குபேரன், லதாசுப்பரமணியன், சௌமியன், பெருவீரமணி, வி.எஸ்.என். செந்தில், இரா.முருகப்பா, விக்னேஷ்,,இரா.முருகன், எஸ்.நாகப்பன், பெருவீரமணி, காழி.கலைவாணன், இரா.மனோகரன், எஸ்.எம். சம்சுதீன், இரா.தனராஜ், சாந்தி, எஸ்.தீபா, எஸ்.பாலமுருகன், வைத்தியநாதன், பிரபாகர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் செள.சர்வோதயன், ஒன்றியக் குழுத் தலைவர்கள் ஜெயபிரகாஷ், மகேந்திரன், மயிலாடுதுறை நகர நிர்வாகிகள் மலைக்கோயில் பிரபாகரன், வை.தெய்வநாயகம், ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

டிசம்பர் மாதம் 17ம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி மாநில மாநாட்டிற்கு மயிலாடுதுறை மாவட்டத்தில் இருந்து அதிக அளவில் இளைஞர் அணியினரை அழைத்து செல்வது என்றும், மாநாட்டில் கலந்து கொள்ள விரும்பம் தெரிவித்து பதிவு செய்த இளைஞர்கள் மற்றும் அனைத்து இளைஞர் அணியினரையும் மாநாட்டில் கலந்து கொள்ள செய்திடுவது என்றும் இப்போதே பணிகளை தொடங்கி மாநாடு சிறக்க மயிலாடுதுறை மாவட்டம் பெரும் பங்காற்றுவது என்றும், மயிலாடுதுறை மாவட்டத்தில் இருந்து இளைஞர்கள் கலந்து கொள்ள ஏற்பாடுகளை மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் செய்திட வேண்டும் என்றும்,

வரும் 27.11.2023 அன்று கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை மயிலாடுதுறை மாவட்ட முழுவதும் கழக கொடி ஏற்றி, இனிப்புகளை வழங்கியும், ஏழை, எளியவர்களுக்கு நல உதவிகள் வழங்கியும், மரக்கன்றுகள் நட்டும், வழங்கியும், மருத்துவ முகாம் மற்றும் இரத்ததான முகாம்கள் நடத்தியும், ஆதரவற்றவர்கள் இல்லங்களில் உள்ளவர்களுக்கு உணவு, உடை வழங்கியும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, பேனா உள்ளிட்ட எழுது பொருட்களை வழங்கியும் சிறப்பாகவும் எழுச்சியுடன் கொண்டாடுவது என்றும்,

கழகத்தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய பகுதியில் உள்ள ஊராட்சிகள் தோறும், நகர, பேரூர் பகுதிகளில் உள்ள வார்டுகள் தோறும் தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள 100 வாக்காளர்களுக்கு ஒருவர் என்று நியமிக்கப்பட்டுள்ள பி.எல்.சி. ஆகியோர்கள் கிளை, வார்டு கழக நிர்வாகிகளுடன் இணைந்து ஒவ்வொரு வீடாகச் சென்று ஒவ்வொரு வாக்காளர்களின் விவரங்களான முகவரி, தற்போதைய முகவரி, தொலைபேசி எண், 80 வயதிற்கு மேற்பட்டவரா, மாற்றுதிறனாளியா, எந்த கட்சியை சேர்ந்தவர் உள்ளிட்ட விவரங்களை அதற்கான படிவதில் பூர்த்தி செய்திட வேண்டும், மேலும் ஒவ்வொரு குடும்பத்திலும் திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்களில் பயன் பெற்ற விவரத்தையும், தற்போது அந்த குடும்பதில் உள்ளவர்கள் தேவையையும் அறிந்து அவற்றையும் படிவத்தில் பூர்த்தி செய்திட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் பணிகள் சிறப்பாக செய்திட பி.எல்.சி.யினருக்கு அறிவுறுத்திட வேண்டும் என்றும்,

வரும் கூட்டுறவு சங்க தேர்தலில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு சங்கங்களிலும் கழகத்தை சேர்ந்தவர்கள் இயக்குநர்களாகவும், தலைவராகவும் தேர்வு செய்திட உடன் அதிக அளவில் உறுப்பினர் சேர்த்திட வேண்டும் என்றும், இந்த பணியில் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களோடு மாநில, மாவட்டக் கழக நிர்வாகிள், சட்ட மன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அனைவரும் இணைந்து கழக வெற்றிக்கு பாடுபடுவது என்றும்

வரும் நாடாளுமன்ற தேர்தலில் மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் வெற்றி பெற மயிலாடுதுறை மாவட்டத்தினர் இப்போதே பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், கழகத்தலைவர் தளபதி ஆகியோர் ஆட்சியின் மக்கள் நலன் சாதனைகளையும், தற்போது ஒன்றிய அரசின் பிரதமராக உள்ள மோடி ஆட்சியில் வேலையின்மை, பொதுத்துறையை தனியாருக்கு தாரை வார்த்தது, சி.ஏ.ஜி.அறிக்கையின்படி பல ஆயிரம் கோடி ஊழல் உள்ளிட்ட வற்றை மக்கள் மத்தியில் திண்ணை பிரச்சாரங்கள் மூலம் ஆதாரத்துடன் எடுத்து கூறி தி.மு.க. வெற்றிக்கு உழைத்திடுவது என்றும்,

இந்திய தேர்தல் ஆணையத்தால் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தும் உள்ளிட்ட பணிகளை செய்திட சிறப்பு முகாம் 25.11.2023 மற்றும் 26.11.2023 ஆகிய நாட்களில் நடத்திட உள்ளது. கழகத்தை சேர்ந்த மற்றும் ஆதரவு புதிய வாக்காளர் பெயர் சேர்தல் மற்றும் இறந்த வாக்காளர்களை நீக்கம், பெயர் திருத்தம் போன்ற பணிகளை கழகத்தை சேர்ந்த நிர்வாகிகள், வாக்குச்சவாடி நிலை முகவர்கள் 2 ஆகியோர் வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியை சிறப்பாக செய்து உரிய படிவங்களை பூர்த்தி செய்து அதிக அளவில் வாக்காளர்களை சேர்க்க வேண்டும் என்றும், குறிப்பாக தற்போது வெளியிடப்பட்டுள்ள வாக்காளர் பட்டியலில் பெயர்கள் நீக்கம் செய்துள்ளதை கண்காணித்து நீக்கம் செய்தவர்களையும் வாக்காளர்களாக மீண்டும் சேர்த்திட வேண்டும் என்றும், புதிய வாக்காளர்கள் சேர்க்கப்பட்ட விவரங்களை தலைமைக்கு அனுப்பிட மாவட்டக் கழகத்திடம் அந்த பட்டியலை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் வழங்கிட வேண்டும் என்றும்,

17.11.2023 சேலத்தில் நடைபெற உள்ள 2 வது இளைஞர் அணி மாநில மாநாட்டிற்கு தமிழ்நாட்டு இளைஞர்களை நேரில் சந்தித்து மாநாட்டிற்கு அழைத்திடும் நிகழ்வு கன்னியாகுமரியில் தொங்கி தமிழ்நாடு முழுவதும் சுற்று பயணம் மேற்கொள்ளும் இருசக்கர வாகனப் பிரச்சார பேரணி மயிலாடுதுறை மாவட்டத்திற்கு 22.11.2023 மற்றும் 23.11.2023 ஆகிய தேதிகளில் வருகை தரும் போது அனைத்து பகுதியிலும் ஒன்றிய, நகர, பேரூரில் சிறப்பான வரவேற்பு வழங்கியதற்கு பாராட்டு என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



கரூர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகமான கரூர் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. மாவட்ட அவைத்தலைவர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர். இளங்கோ, க.சிவகாம சுந்தரி, மாவட்ட நிர்வாகிகள் எம்.எஸ்.கருணாநிதி மகேஸ்வரி, பரத், மேயர் கவிதா கணேசன், மாநகரக் கழகச் செயலாளர் எஸ்.பி.கனகராஜ், காலனி செந்தில், துணை மேயர் தாரணி சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் வருகின்ற டிசம்பர் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள தி.மு.க. இளைஞரணி மாநில உரிமை மீட்பு 2–ஆவது மாநாடு கூட்டத்திற்கு கரூர் மாவட்டத்திலிருந்து திரளான இளைஞர்களை பங்கேற்க வைப்பது, வருகின்ற 24ஆம் தேதி கரூர் மாவட்டத்திற்கு வருகை தரும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பேனா தேருக்கு சிறப்பாக வரவேற்பு அளிப்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# செஞ்சியில் மக்களுடன் முதல்வர் குறைதீர்க்கும் முகாம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான்தொடங்கி வைத்தார்!

செஞ்சி, நவ. 24-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் மக்களுடன் முதல்வர் குறைதீர்க்கும் சிறப்பு முகாம் நடைபெற்றது.

செஞ்சி தேசூர் பாட்டைசமுதாய கூடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு திண்டிவனம் சார் ஆட்சியர் பொறுப்பு தமிழரசன் தலைமை தாங்கினார்.

பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் கடலூர் மண்டலம் வெங்கடேசன், செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மக்களுடன் முதல்வர் குறை தீர்க்கும் சிறப்பு முகாமினை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்,

முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக பெண்கள் பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும் என்பதற்காக பெண்கள் நலன் சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வரும் முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள மக்களின் குறைகளை விரைந்து தீர்ப்பதற்காக மக்களுடன் முதல்வர் என்ற மாபெரும் திட்டத்தை அறிவித்துள்ளார்.

இத்திட்டத்தில் பொது மக்களின் அனைத்து குறைகளையும் கணினி வழியில் பதிவேற்றம் செய்து முதலமைச்சரின் நேரடி பார்வையில் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு குறைகள் நிவர்த்தி செய்யப்படும் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமைப்பட தெரிவித்தார்.

முகாமில் எரிசக்தி மற்றும் தமிழ்நாடு மின்சார துறை,வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சித்துறை, காவல்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, சமூக நலன் உள்ளிட்ட துறைகளிலிருந்து அரசு அதிகாரிகள் பங்கேற்று பொது மக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களை கணினி மூலம் பதிவேற்றம் செய்தனர்.

முகாமினை விழுப்புரம் நகராட்சி, செஞ்சி பேரூராட்சி முகாம் மேற்பார்வையாளர் ரமேஷ் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

நிகழ்ச்சியில் உதவி செயற்பொறியாளர் ராதாகிருஷ்ணன், பேரூராட்சி கண்காணிப்பாளர் பழனிகுமார், செயல் அலுவலர்கள் முருகன், முரளி, துப்புரவு ஆய்வாளர் பார்கவி, துப்புரவு பணி மேற்பார்வையாளர் செந்தில் முருகன் உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்கள், பணியாளர்கள், அனைத்து பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

முகாமில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள்கலந்து கொண்டு பட்டம் மாற்றம், குடும்ப அட்டை, முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் பெறுவது, கல்வி உதவித்தொகை வேண்டி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றி தரக்கோரி மனு அளித்தனர்.

வட்டாட்சியர் ஏழுமலை நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவொற்றியூர் க.வீராசாமி
### நவம்பர் 24 (2008)



**திருவொற்றியூர் நகரத்தில் ஆரம்பகால கழகத் தோழர்.**

**திருவொற்றியூர் நகரக் கழக அவைத்தலைவராக, மாவட்டக் கழக பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர். கழகத்தின் மூத்த தலைவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பை பெற்றவர்.**

**திருவொற்றியூர் நகரமன்ற உறுப்பினராகவும், துணைத் தலைவராகவும், அசோக்லேலண்ட் வீடு கட்டும் கூட்டுறவு சங்கம் மற்றும் நாணய சங்கத்தின் தலைவராகவும் இருந்து திறம்பட பணியாற்றியவர்.**

**வடசென்னை மாவட்ட தொ.மு.ச. மாவட்ட தலைவராக பணியாற்றி தொழிலாளர்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

தமிழ்நாடு அரசு
**தொழில் நுட்பக்கல்வித்துறை**
தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை - 600 025
கலைஞர் 100 1924 - 2023

**முன் தகுதி மின்னணு ஒப்பந்தப்புள்ளி எண்.38த.பொ/வ.அ.3/தொநுகவ/2023-24 நாள் : 21.11.2023**
**ஒப்பந்தப்புள்ளி படிவம் : மொத்த தொகை / விலை விகித முறை (இரு உறை முறை)**

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும், மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் தலைமைப்பொறியாளர், பொபது, தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை – 600 025 அவர்களால் பதிவு பெற்ற தகுதி வாய்ந்த பொதுப்பணித்துறை ஒப்பந்ததாரர்களிடமிருந்து மின்னணு முறையில் கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தங்கள் கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | தோராய மதிப்பீடு (சரக்கு மற்றும் சேவை வரியுடன் ரூபாய் இலட்சத்தில்) | முன் வைப்புத் தொகை ரூபாய் மற்றும் பணி முடிக்க வேண்டிய காலம் | தகுதியான ஒப்பந்ததாரர் | முன் வைப்புத் தொகை மின்னனு முறையில் செலுத்த வேண்டிய செயற் பொறியாளர் |
|---|---|---|---|---|---|
| 1 | சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா செட்டியார் அரசு பொறியியல் தொழில் நுட்ப கல்லூரியில் 100 மகளிர்க்கான விடுதி கட்டும் பணி | 556.00 | 288000/- 13 மாதங்கள் | வகுப்பு 2 மற்றும் அதற்கு மேல் | செயற்பொறியாளர், பொபது தொழில் நுட்பக்கல்விக் கோட்டம், மதுரை |
| 2 | புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரியில் 24 வகுப்பறைகள் கட்டும் பணி | 631.00 | 326000/- 13 மாதங்கள் | வகுப்பு 2 மற்றும் அதற்கு மேல் | செயற்பொறியாளர், பொபது தொழில் நுட்பக்கல்விக் கோட்டம், திருச்சி |

செ.ம.தொ.இ/6155/ஒப்பந்தப்புள்ளி/2023

1. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள், மின்னணு வழியாக ஒப்பந்தப்புள்ளி கோருதல் மற்றும் அறிவுறுத்தல்கள் குறித்து http://tntenders.gov.in இணையதளத்தில் தெரிந்துகொள்ளலாம். 2.ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பதிவேற்றம் செய்ய வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 27.12.2023 காலை 11.00 மணி வரை (மின்னணு முறை) (சர்வர் சிஸ்டம் கடிகாரம்) 3.மின்னணு ஒப்பந்த புள்ளிகள் (முதல் உறை) திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 28.12.2023 காலை 11.30 மணி அளவில் (சர்வர் சிஸ்டம் கடிகாரம்) 4.மின்னணு ஒப்பந்தப்புள்ளி கலந்துகொள்ள மின்னணு கையொப்பம் கட்டாயமாகும். ஒப்பந்தப்புள்ளி விவரங்களில் ஏற்படும் மாற்றங்கள் – திருத்தம் மேற்காணும் இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

**தலைமைப் பொறியாளர்,** பொபது., தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை – 600 025.

**தமிழ்நாடு அரசு, பொதுப்பணித்துறை**
**கட்டடம் (க & ப ) வட்டம் தஞ்சாவூர். இன விலை முறை**
கலைஞர் 100 1924 - 2023

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 16/க.பொ/க (க & ப) வட்டம். தஞ்சாவூர் /2023-2024/ நாள்.21.11.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டடம் (க & ப ) வட்டம், தஞ்சாவூர்-1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து ஒரு பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1) கடலூர் மாவட்டத்தில் ஒரு பணிக்கான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்.

| | | |
|---|---|---|
| 2 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் | 24.11.2023 முதல் 11.12.2023 மாலை 3.00 மணி வரை. |
| 3 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | 11.12.2023 மாலை 3.00 மணி வரை. |
| 4 | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | 12.12.2023 மாலை 3.00 மணி |

5) விலை மாறுதல் கூறு (Price Adjustment Clause) இப்பணிக்கு பொருந்தும்

**கண்காணிப்பு பொறியாளர், பொபது (கூ/பொ)**
**கட்டட (க & ப) வட்டம், தஞ்சாவூர்- 1.**

**செ.ம.தொ.இ / 6189/ ஒப்பந்தப்புள்ளி /2023**